**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.469/2024</u>**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சின்னத்துரை | தொழில் | |
| த/பெ | : கிட்டுசாமி | கிராமம் | |
| வயது | : | தாலுகா | |
| | : | மாவட்டம் | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தச்சாபாளையம் கிராமம் ஓலப்பாளையத்தில் குடியிருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் காடையூர் கிராமம் வீனம்பாளையத்தில் குடி இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வீனம்பாளையத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். பெரியசாமி என்பவர் எனக்கு உயில் எழுதி வைத்தது மூலமாக தாவா சொத்தில் நான் பாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவாவில் தாவா சொத்துகளில் எவ்வளவு விகிதாச்சாரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் பெரியசாமி எழுதி வைத்த உயிலின் பிரகாரம் பாகம் கோருகிறேன். தாவா சொத்து பாகம் பிரிபடாத சொத்து என்று சொன்னால் சரிதான். ஒன்பதில் நான்கு பங்கு கோரி நான் வழக்கு தாக்கல் செய்து என்றால் சரிதான். மீதி பாகம் பிரதிவாதிகளுக்கு என்று நான் கூறுகிறேன். பெரியசாமிக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் பாகப்பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. 1–ம் பிரதிவாதியும், எனக்கு உயில் எழுதி வைத்ததாக கூறப்படும் பெரியசாமியும் சகோதரர்கள் என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி அவர்களின்

சகோதரி என்று சொன்னால் சரிதான். அவர்கள் மூவரின் தகப்பனார் பெயர் பெரியசாமி கவுண்டர் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து அவர்களின் குடும்ப சொத்து என்று சொன்னால் சரிதான். பெரியசாமிக்கு மனைவியும் ஒரே ஒரு பெண் மகளும் இறந்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். பெரியசாமிக்கு நேரடி வாரிசு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிகள் அவருடைய இரண்டாம் நிலை வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை தவிர எனக்கு வேறு பூமியில் எதுவும் இல்லை. மேற்படி பெரியசாமி என்னுடைய பெரியப்பா என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாத்தா கோடாரப்ப கவுண்டரும் பெரியசாமியின் தாத்தா பாட்டைய கவுண்டரும் சகோதரர்கள் என்று நான் என்னுடைய வழக்கில் தவறாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணம் பதிவு செய்யப்படாதது என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலை நான் படித்துப் பார்த்தேன். மேற்படி உயிலில் நான் மேற்படி பெரியசாமிக்கு என்ன உறவு என்று எழுதியுள்ளாரா என்றால் இல்லை. மேற்படி பெரியசாமி வாழ்ந்து வந்து இறந்தது அனைத்தும் வீனம்பாளையம் என்று சொன்னால் சரிதான். அவர் இறந்தபோது அவருக்கு இறுதிச்சடங்கு செய்தது 1–ம் பிரதிவாதி கோவிந்தசாமியின் மகன் என்றால் சரிதான். பெரியசாமி ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் என்று சொன்னால் சரிதான். அவருக்கு எந்த சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் எந்த சொத்துக்கள் தனக்கு பாத்தியப்படாத சொத்துக்கள் என்றும் தெரியும் என்று சொன்னால் சரிதான்.

4. காலை எண். 944 பி நிலம் மேற்படி பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்தா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை கடந்த 27.06.2007 இல் மேற்படி பெரியசாமியும் ஒன்னாம் பிரதிவாதியும் இணைந்து விற்பனை செய்து விட்டார்கள் மேற்படி பெரியசாமியும் 1–ம் பிரதிவாதியும் இணைந்து விற்பனை செய்து விட்டார்கள் என்று சொன்னால் அது குறித்து

எனக்கு தெரியாது. மேற்படி சொத்தும் உயிலின் சொத்துவிவரத்திலும் வழக்கின் சொத்து விவரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அப்படி இருக்காது பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன எதிர்வழக்குரையில் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கள் பெரியசாமிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 11.09.1984 தேதியிட்ட பாக ஆவணத்தின் நகலை நான்தான் நகல் போட்டு வாங்கினேன். அதில் என்ன சொத்து விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்பதை நான் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி பாகப்பிரிவினை யார் யார் செய்து கொண்டார்கள் என்று விபரமும் எனக்கு தெரியாது. இறந்துபோன பெரியசாமி ஆசிரியராக இருந்ததால் பத்திரங்கள் பதிவு செய்யும் விபரங்கள் அவருக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். உயில் 11.02.2021–ல் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அப்போது மேற்படி பெரியசாமி நல்ல நிலைமையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் பதிவு செய்யப்பட்ட பிறகு மேற்படி பெரியசாமி 03.03.2021 ஆம் தேதியில் வேறு ஒரு பத்திரம் பதிவு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. பெரியசாமி உண்மையிலேயே மேற்படி உயிலை எழுதியிருந்தால் அதை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி உயில் யாரால் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் பின்னிட்டு அதை தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி பெரியசாமி இறந்த பிறகு அவரது ஊருக்கு சென்று நான் அதை பார்த்து எடுத்தேன். மேற்படி உயிலில் இருப்பது மேற்படி பெரியசாமியின் கையெழுத்து அல்ல என்றாலும் அதை நான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் உள்ள கையெழுத்து பெரியசாமியின் கையெழுத்து என்பதை உறுதி செய்ய அவரது ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து அடங்கிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை.

6. சாட்சி மதியழகன் எங்கள் ஊருக்கு அருகில் இருக்கும் வீரசோழபுரத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினர் அல்ல. என்னுடைய சகோதரி பெயர் ஜோதிமணி. அவரை சுப்பிரமணி என்பவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் அமராவதி பாளையத்தில் குடியிருக்கிறார். மேற்படி அமராவதிபாளையம் வீனம்பாளையத்துக்கு அருகில் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய மைத்துனர் நிலத்தரகராக வேலை செய்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பெரியசாமி பூமியான கா.சா. எண்.255 செலபூஞ்சை காட்டை ஒரு சம்பத்குமார் என்பவருக்குஎன்னுடைய மைத்துனர் வாங்கி கொடுத்துள்ளார் என்று சொன்னால் பழக்க வழக்கத்தில் வாங்கி கொடுத்திருக்கலாம். பெரியசாமி மீதமுள்ள பூமியும் சம்பத்குமாருக்கு விலைக்கு கேட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதை பெரியசாமி கொடுக்காததால் அவர்களுக்குள் வருத்தம் ஏற்பட்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. உயிலில் உள்ள மற்றொரு சாட்சி ராஜ்குமார் முத்துக்காளி வலசை சேர்ந்தவர் என்றால் சரிதான். அது அமராவதிபாளையத்திற்கு கிழக்கில் உள்ளது. அவர் சுப்பிரமணிக்கு உறவினர் என்று சொன்னால் சரியல்ல. பெரியசாமி நிலத்தை அபகரிப்பதற்காக நான் மதியழகனை சாட்சியாக வைத்தும் என்னுடைய மைத்துனர் சுப்பிரமணி ராஜ்குமாரை சாட்சியாக வைத்தும் மேற்படி உயிலை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே பெரியசாமி எனக்கு உயில் எழுதியிருந்தார் என்னுடைய உறவு முறையை குறிப்பிட்டு இருப்பார் என்றாலும் ஏன் அவர் பிரதிவாதிகளுக்கு சொத்து எழுதி வைக்கவில்லை என்பதற்கான காரணத்தையும் குறிப்பிட்டு இருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

7. அவர் 2022 ஆம் வருடம் இறந்தார். இறந்ததற்கு பிறகு மேற்படி உயிலை உரிய அலுவலகத்தில் தாக்கல் செய்து வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்தேனா என்றால் இல்லை. உயில்படி சொத்தை பிரித்துக்

கொடுக்க சொல்லி பிரதிவாதிகளிடம் கேட்டேனா என்றால் கேட்கச் செல்லும் போது தான் பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள். எந்த தேதியில் கேட்டேன் என்று சரியாக நினைவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்தை பிரித்து தரச் சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் பாகம் பிரித்து தரச் சொல்லி எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் உண்மையானதாக இருந்தால் இந்த வழக்கில் நான் பாகப்பிரிவினை கோரி இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலை கடந்த 27/6/2024–ஆம் தேதி தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கும் பெரியசாமிக்கும் எந்தவிதமான உறவு முறையோ தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பெரியசாமி அவரது இறுதி காலம் வரையில் நான் பார்த்து வந்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

8. உண்மையில் 1–ம் பிரதிவாதி கோவிந்தசாமி தான் மேற்படி பெரியசாமியை பார்த்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர் இறக்கும் வரையில் 1–ம் பிரதிவாதியின் வீட்டில் தான் அவர் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பெரியசாமி உயில் எதுவும் வைக்க எழுதி வைக்காதால் அவரது அடுத்த நிலை வாரிசுகளான பிரதிவாதிகளுக்கு தான் தாவா சொத்து சேர்த்தது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில் நான் மோசடியாக தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையில் நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பாகம் பிரிப்படாத சொத்துக்கள் என்பதால் அதை பொருத்து நான் கோரிய நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையில் நான் எப்போதும் தவா சொத்தில் சுவாதீனத்தில் தி இனத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல . தாவா சொத்து தற்போதும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்று

**சொன்னால் சரியல்ல தாவாவை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை:– இல்லை**

| |
|---|
| இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.<br>SARAVANAN MANOKARAN<br>Digitally signed by SARAVANAN MANOKARAN<br>Date: 2026.02.10 19:31:27 +0530<br>3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,<br>தாராபுரம். |

## <u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>
## <u>அ.வ.எண். 469/2024</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.2**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | தொழில் |
| த/பெ | மயில்சாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். என் முதல் விசாரணை நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய சொந்த ஊர் முத்துக்காளி வலசு. முத்துக்காளி வலசுக்கு அருகில் அமராவதி பாளையம் உள்ளது என்றால் சரிதான். அமராவதிபாளையத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் முன்பு தெரியாது வழக்குக்கு பின்னிட்டு தெரியும் அவர் என்னுடைய உறவினர் அல்ல. நான் வழக்குக்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் அவர் என்னுடைய உறவினர் என்று சொன்னால் சரியல்ல. சுப்பிரமணி என்பவர் நிலம் வாங்கி விற்கும் தரகராக செயல்பட்டு வந்தார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. சின்னதுரை

என்பவர் ஓலப்பாளையத்தில் குடியிருக்கிறார் என்பது இந்த வழக்குக்கு பின்னிட்டு எனக்கு தெரியும்.

2. வீனம்பாளையம் பெரியசாமி மற்றும் பிரதிவாதிகள் என்னுடைய உறவினர்கள் அல்ல என்று சொன்னால் சரிதான். அவர்கள் குடும்பத்திற்கும் என்னுடைய குடும்பத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரிதான். அவர்கள் குடும்பம் தொடர்பான வேறு ஆவணங்கள் எதிலும் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பெரியசாமியின் தகப்பனார் பெயரும் பெரியசாமி ஆகும். உயில் எழுதி வைத்த பெரியசாமிக்கு தம்பி ஒருவர் இருக்கிறார் அவர் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி பெரியசாமியின் குடும்பத்திற்கு வீனம்பாளையத்தில் பூமிகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பெரியசாமி அரசு ஆசிரியராக இருந்தார். நான் அவரிடம் படிக்கவில்லை. உயிலின் தேதி எனக்கு நினைவில்லை 2021 ஆம் வருடம் இரண்டாவது மாதம் எழுதப்பட்டது. உயிலை பெரியசாமி என்பவர் தான் எழுதி வந்தார் எங்கே வைத்து எழுதினார் என்று எனக்கு தெரியாது. அவரது வீட்டிற்கு என்னை வரச் சொல்லி கையெழுத்து வாங்கினார். கையெழுத்து போடுவதற்கு ஒரு நாளுக்கு முன்பு என்னிடம் சொன்னார். நான் சென்றபோது அவர் தனியாகத்தான் இருந்தார் அவரது சகோதரர் கோவிந்தசாமி உடன் இல்லை. மதியழகன் அங்கு அமர்ந்திருந்தார். அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நான் சென்ற பிறகுதான் பெரியசாமி உயிலில் கையெழுத்து செய்தார். உயிலில் உள்ள இரண்டு பெரியசாமி கையெழுத்துகளிலும் வேறுபாடு உள்ளது என்று சொன்னால் சிறியதும் பெரியதுமாக உள்ளது. உயிலை என்னை படித்துக் காட்டச் சொன்னார். அவருக்கு உயிலின் சொத்துவிவரங்களை படித்துக்காண்பித்தேன். மேற்படி சொத்து விவரங்கள் சரி என்று என்னிடம் சொன்னார் என்றால் சரிதான்.

3. உயில் சொத்துக்கள் எவ்வளவு பாகமாக உள்ளது என்று அவர் என்னிடம் சொல்லவில்லை. சின்னதுரை மேற்படி பெரியசாமிக்கு என்ன உறவுமுறை என்று உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு

நினைவில்லை. பெரியசாமியும் அவருடைய சகோதரர்களும் ஒரே குடும்பமாக வீனம்பாளையத்தில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. முதல்நாள் எத்தனை மணிக்கு என்னுடைய வீட்டிற்கு வந்து மறுநாள் காலை 10 மணிக்கு அவரது வீட்டுக்கு வரச் சொல்லி பெரியசாமி சொன்னார் வீனம்பாளையத்தில் அவருக்கு வேண்டிய முக்கியமான நபர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். நான் அவரிடம் அவருக்கு தெரிந்த நபர்களை வைத்து சாட்சி கையெழுத்து போடலாமே என்று கேட்டேன். ஆனால் அவர் தன்னுடைய தம்பி குடும்பத்திற்கு உயில் எழுதி வைப்பது தெரிய கூடாது என்று சொன்னார். மேற்படி உயிலை பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யாததற்கான காரணம் எனக்கு தெரியாது. மேற்படி உயில் பெரியசாமியால் தயார் செய்யப்பட்டு அவரால் கையெழுத்து செய்யப்பட்ட உயில் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

4. பெரியசாமியின் சொத்தை சம்பத்குமார் என்பவருக்கு கிரையம் செய்துகொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் மைத்துனர் சுப்பிரமணியம் பொய்யான உயிலை தயார் செய்வதற்கு என்னை சாட்சியாக பயன்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா உயிலில் இரண்டு பக்கங்களிலும் காணப்படும் கையெழுத்து பெரியசாமியின் கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்களால் மோசடியாக தயார் செய்யப்பட்ட கையெழுத்து என்று சொன்னால் சரியல்ல. என் முன்னிலையில் பெரியசாமி மேற்படி உயிலில் கையெழுத்து செய்ததாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் சாட்சி கையெழுத்து போட்டதாக கூறுவதும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

4. பெரியசாமி 2022 ஆம் வருடம் இறந்தார். அவரது இறுதிச் சடங்கை அவருடைய தம்பி மகன் தான் செய்தார் என்றால் சரிதான். பெரியசாமிக்கும் அவரது தம்பி குடும்பத்திற்கும் எந்த விதமான பிரச்சனைகளும் இருந்ததாக எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். நான், மதியழகன் வாதி சுப்பிரமணியன் ஆகியோர் சேர்ந்து மேற்படி உயிலை மோசடியாக தயார்

செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.10 19:31:34 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**
**அ.வ.எண்.469/2024**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.3**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | மதியழகன் | தொழில் |
| த/பெ | முத்துச்சாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். என் முதல் விசாரணை நிருபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னை நீதிமன்றத்திற்கு வரச் சொல்லி வாதி சொன்னார். வாதியின் வழக்கறிஞர் சொன்னதன் அடிப்படையில் முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதை என்னிடம் படித்து காட்டினார்கள். மேற்படி ஆவணத்தில் பெரியசாமி, வாதிக்கு உயில் எழுதி வைத்திருப்பதாக காணப்படுகிறது. வாதியின் ஊரும் என்னுடைய ஊரும் அருகருகில் உள்ளது என்று சொன்னால் சுமார் 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. நான் கூலி வேலை செய்கிறேன். வீனம்பாளையத்தில் எனக்கு யாரையும் தெரியாது. பெரியசாமி நான் பார்த்திருக்கிறேன். பாப்பினியம்மன் கோவிலில் வைத்து நான் பார்த்திருக்கிறேன். அவரை எனக்கு 10 வருடங்களாக தெரியும். நாங்கள் இருவரும் மேற்படி கோவிலுக்கு செல்வது மூலமாக அறிமுகம். அவரைத் தவிர எனக்கு வீனம்பாளையத்தில் வேறு யாரையும் தெரியாது என்று சொன்னால் சரிதான். அவருடைய மனைவி மக்கள் உடன்பிறப்புகள் யாரையும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். அவர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிவதாக என்னிடம் சொன்னார். அவர் என்னிடம் கோவிலில் அறிமுகமானபோது பணியில் இல்லை.

2. மேற்படி பெரியசாமி கோயிலில் அறிமுகம் என்றும் பத்து வருடமாக எனக்கு தெரியும் என்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டேனா என்றால் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். பெரியசாமி எந்த விதத்தில் எனக்கு பழக்கம் என்பது குறித்து நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் வாதிக்கு வேண்டிய நபர் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய ஊருக்கும் வீனம்பாளையத்திற்கும் சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான். பெரியசாமியின் கையெழுத்து எப்படி இருக்கும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. உயிலில் முதல் பக்கத்தில் உள்ள கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு கண் பார்வை சரியில்லாததால் தெரியவில்லை. கடந்த ஒரு வருடமாக எனக்கு கண் பார்வை குறைந்து விட்டது. மேற்படி ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையெழுத்து யாருடையது என்று எனக்கு தெரியவில்லை புள்ளி புள்ளியாக தெரிகிறது. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனக்கு பெரியசாமியின் கையெழுத்து எப்படி இருக்கும் என்று தெரியாததால் எனக்கு கண் பார்வை குறைந்துவிட்டது என்று நான் தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. பெரியசாமி ஏற்படுத்திக் கொடுத்த பிற ஆவணங்களில் என்னை சாட்சி கையெழுத்து போட அழைத்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி பெரியசாமி உண்மையிலேயே எனக்கு 10 வருட காலமாக பழக்கம் உடையவராக இருந்தால் மற்ற ஆவணங்களிலும் சாட்சி கையெழுத்து போட என்னை அழைத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. தாவா உயிலில் சின்னத்துரை கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு படிப்பறிவு இல்லாததால் உயில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. உயிலில் மேற்படி வாதி தனக்கு என்ன உறவு முறை என்று மேற்படி பெரியசாமி குறிப்பிட்டாரா என்று எனக்கு நினைவில்லை ஆனால் என்னிடம் தன்னுடைய அண்ணன் மகன் என்று சொன்னார். வாதியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. உயிலில் வீனம்பாளையத்தில் பெரியசாமியின் வீட்டில் வைத்து கையெழுத்து போட்டேன். அன்றுதான் முதன் முறையாக நான் வீனம்பாளையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். வீனம்பாளையத்தில் பெரியசாமியின் உடன் பிறந்த சகோதரர் யாரும் இல்லை பெரியசாமி மட்டும் தான் இருந்தார். பெரியசாமி சொல்லிதான் மேற்படி உயிலில் நான் சாட்சிகையெழுத்து போட்டேன். மேற்படி உயில் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது. மேற்படி உயிலை பதிவு செய்ய வேண்டும் என்று என்னிடம் சொன்னாரா என்றால் சொல்லவில்லை.

4. பெரியசாமி மேற்படி உயிலை எழுதி வைக்கவில்லை என்றாலும் மேற்படி உயிலில் கண்டுள்ள கையெழுத்து பெரியசாமி உடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேற்படி உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் பெரியசாமிக்கும் எந்த விதமான தொடர்பும் அறிமுகமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் இருவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். பெரியசாமியின் கையெழுத்தை மோசடியாக தயார் செய்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கி உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மோசடியான உயிலை பொறுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.10 19:31:41 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.